
628

# போதனு விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்




C. Venkatachalam S. 1941-43.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 MAR 1947
628

Editor & Publisher ... Lourduswami, B.A., L.T.
R.C. ...ning School, Trichinopoly.

செ... ப்ருவரி 1947 மலர் 8

JL
ண 211, N11 PP
N147·37·8·
2 10015

...றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2.

## பத்திராதிபர் குறிப்புகள்

**T. S. L. C. பரீட்சை 1947.**—இப்பரீட்சை அடுத்த மார்ச்சு-மீ 31-ம் தேதியிலிருந்து தொடங்கி, வழக்கம்போல் இங்கு நம் பாடசாலே ஸெண்டரில் நடைபெறும். பரீட்சை கால அட்டவணையை மற்ருேரிடத்திற் காண்க.

முன்வருடங்களில் ஷெ பரீட்சையில் தவறிப்போயிருக்கும் நம் பழையமாணவர்கள், இவ்வருஷம் **வேறு ஸெண்டரில்** பரீட்சை எழுத விருப்பம் இருந்தால் அதைப்பற்றி நமக்குத் தெரிவிப்பதுடன் அவர்கள் இங்கு நம் பாடசாலேயில் படித்த தற்கு அத்தாட்சியாக, இப்பாடசாலேத் **தலேமை ஆசிரியரிட மிருந்து** அத்தாட்சிப்பத்திரம் (Identification Certificate) ஒன்று பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதற் காக தபால்சார்ஜுக்கு $1\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு உடனே அனுப்பி அதைப் பெற்றுக்கொள்ளத்தகும்.

**பழையமாணவர்தினக் கொண்டாட்டம்** : இஃது மார்ச்சு மாதம் 22-ம் வ (22-3-47) சனிக்கிழமை மாலே நம் பாடசாலே யில் நடைபெறும். அவ்வமயம் நம் பழையமாணவர்கள் அனே வரும் தவருமல் விஜயம்செய்து, ஷெ விழாவைச் சிறப்பித்துத் தம் தாய் பாடசாலேயின்பேரில் தங்களுக்குள்ள அன்பையும் அபிமானத்தையும் புதுப்பித்துக்கொள்வார்களென முற்றிலும் நம்புகின்றனம்.

---

## விடுகதை விடைகள்

[கொத்து 37, மலர் 7, பக்கம் 118-ன் விடுகதைகள்]

1. நாக்கு. 2. ஊசியும், நூலும். 3. நெல். 4. அம்மி. 5. எலிப்பொறி. 6. விக்கல், கறுக்கல், புழுங்கல், அழுகல். 7. சிறிய உழக்கு, பெரிய உழக்கு. 8. பஞ்சு. 9. பானே.

---

சென்னை கல்வி இலாகா

# TRAINING-SCHOOL LEAVING CERTIFICATE EXAMINATION, APRIL 1947

## TIME-TABLE

### Secondary Grade

| Days and Hours 1947 | Subjects. |
|---|---|
| **Monday, the 31st March** | |
| 10 A.M. to 12 NOON ... | Education I (Principles of Education) |
| 2 P.M. to 4 P.M. ... | Education II (School Administration) |
| **Tuesday, the 1st April** | |
| 10 A.M. to 1 P.M. ... | Special Methods (Non-language subjects) I Mathematics and General Science |
| 2 P.M. to 4-30 P.M. ... | English (Methods and Texts) |
| **Wednesday, the 2nd April** | |
| 10 A.M. to 1 P.M. ... | Special Methods (Non-language subjects) II History & Civics and Geography |
| 2 P.M. to 4-30 P.M. ... | A language of the Presidency (Methods and Texts) |

### Elementary Grade

| | |
|---|---|
| **Monday, the 31st March** | |
| 10 A.M. to 12 NOON ... | Child Nature and Education |
| 2 P.M. to 4 P.M. ... | School Administration |
| **Tuesday, the 1st April** | |
| 10 A.M. to 12-30 P.M. ... | Method of Teaching-Language (Text) |
| 2 P.M. to 4 P.M. ... | Methods of Teaching-Elementary Mathematics |
| **Wednesday, the 2nd April** | |
| 10 A.M. to 12 NOON ... | Methods of Teaching-Nature Study and Gardening |
| 2 P.M. to 4 P.M. ... | Methods of Teaching-Indian History and Civics |
| **Thursday, the 3rd April** | |
| 10 A.M. to 12 NOON ... | Methods of Teaching-Geography |
| 2 P.M. to 4 P.M. ... | Rural Social Problem |

210015

# மறவர் மாண்பு

[வித்துவான், தே. நாதமுனி]

இரவு உணவு உண்டு உறங்கவேண்டிய நேரம். ஆனால் நெடிய உறக்கம் எதிர்கொண்டழைக்கும் இத்தருணத்தில் யார்தான் உறங்குவார்? எங்கும் பரந்த இருள் நிரம்பி இருந்தது. மறவர்கள் எவ்வளவோ இருளைக் கண்டிருந்தனர், எனினும் அன்றிரவுபோல் அச்சம் விளைத்த இருள் எதையுமே அவர்கள் கண்டதில்லை. மறவர் தலைவன் மதிதயனது பாசறையில் மெல்லிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவனது ஊசலாடும் உள்ளத்தை உள்ளவாறு உணர்த்துவதுபோல அதன் ஒலி அசைந்துகொண்டிருந்தது. இருபது வயது கடந்த அவ்விளங்காளையின் கண்களோ சிவந்து கொவ்வைக்கனிபோல் காணப்பட்டன. அவனைச்சுற்றி சில மறவர்கள் குழிமி இருந்தனர். அவனது மனக்கொதிப்பைக் கண்ட அவர்கள் "தலைவனே மறவரது மானமும் வீரமும் என்றும் பாழ்படாது. மறவர் குடியில் ஓர் ஆண் மகன் உள்ளளவும் பாண்டியன் ஈண்டுப் பாதம் வைக்க முடியாதென்பது திண்ணம். அதுபற்றி என் கலக்கம்?" என்றனர். "வீரச்செல்வர்களே உங்களது மானத்தோடு உயிரையும் காக்க வேண்டியது என் கடனல்லவா? அநியாயமாய் இவ்வளவு பேரும் மடிவதா? என்றுதான் எண்ணுகிறேன்" என்றான். இவ்வளவையும் திரை மறைவில் நின்று கேட்டுக்கொண்டிருந்த அவன் தங்கை தாமரைச் செல்வி அதற்குமேல் அங்கு நிற்க மனமில்லாதவளாய் தனது அந்தப்புரத்தை அடைந்தாள்.

முன்னமேயே ஊசலாடிக்கொண்டிருந்த அவளது உள்ளத்தை மதிதயனின் சொல் ஒரு தீர்மானத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தது. அவளை மணக்க விரும்பிய பாண்டியன், அவளுடைய தந்தை தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசன் என்பதற்காக மரியாதை இல்லாமல் அதிகார தோரணையில் பெண் கேட்டான். மானமாகிய வீதியிலே தமது வாழ்வுத்தேரைச் செலுத்தும் மறவர் தலைவனுக்கு, அரசன் வரி கேட்பதுபோலத் தன்னிடம் மகள் கேட்டது பெரும் கோபத்தை விளைத்தது. அதன் காரணமாக எழுந்த போரிலேதான் இன்று பகலிலே அவன் பாண்டியன் வாளுக்குப் பலியானான். தந்தையின் மரணத்தின்பின் மகன் மதிதயன் தலைமை தாங்கி போரை நடத்தினான். மறவர்களால் மன்னர் மன்னனை வெல்லுவது முடியாதென்பது அவர்களுக்கு நன்கு தெரியும். எனினும் போராடி உயிர்விடுவதே ஒழிய மானத்தை விடுகிறதில்லை என்னும் முடிவிற்கு வந்துவிட்டனர். மறவர் குடியின் அழிவிற்கு உரிய ஒரே காரணமாகத்தான் இருப்பதைக்கண்ட இளவரசி யாது செய்வதென அறியாது வருந்தினாள். பின்னர் ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவளாய்த் தனது அந்தப்புரத்தையடைந்தாள்.

அன்றையப்போரில் வெற்றிகண்டவர்களும் இன்னும் சில நாட்களில் மறவரில் ஒருவன்கூட இல்லாது எளிதில் அழித்துவிடலாம் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமாகிய பாண்டியனது படைவீரர்கள் கவலையின்றி

கண்ணுறங்கினர். ஆனால் அவனால்மட்டும் தூங்கமுடியவில்லை. அவனது உள்ளமோ அலைகடல் சுழிபோல் சுழன்றுகொண்டிருந்தது. அது வெற்றிக் களிப்பினாலல்ல, வேதனை மிகுதியால் அவன் வேண்டியதும் வெற்றியை அல்ல, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரேயே தனது உள்ளக் கோவிலில் உறைவிடம்கொண்ட அந்நங்கையையே ஆகும். காமனைப்பழிக்கும் கட்டழகையும் பழம் பெருநாடாகிய பாண்டியநாட்டரசையும் பெற்றுள்ள தனக்குப் பெண் கொடுக்க அவன் ஏன் மறுத்தான் என்பதே அவ னுக்கு விளங்கவில்லை. "மடிந்தாலும் மடிவோம் மகளைத் தாரோம்" என மறவர்கள் கூறிக்கொண்டு மாயும்படியாகத் தன்னை அவ்வளவு கொடியவனாக அவர்கள் ஏன் கருதுகின்றார்கள் என்றெல்லாம் பலவாறு சிந்தித்தான்.

அந்தப்புரம் அடைந்த அரசிளஞ்செல்வியோ போருடைபூண்டு புரவி ஒன்றேறி ஐந்துமைல்களுக்கு அப்பாலுள்ள பாண்டியனது பாசறையை நோக்கிப் புறப்பட்டாள். அக்காட்டுப்பாதையிலே காரிருளிலே தன்னந் தனியே மூன்றுமைல்தூரம் கடிது சென்றாள். இனி எதிரிகள் நட மாடக்கூடிய இடமாதலால் குதிரையை நிறுத்தி மெல்லச் செலுத்தினாள். அவளுடைய இருதயம் அச்சத்தினால் படபடவென அடித்தது. சருகு களில் பட்டு குதிரையின் குளம்புகள் ஒலிக்குந்தோறும் எங்கு பகைவரின் காதில் பட்டுவிடுகிறதோ என பயந்தாள். அவளுடைய கண்கள் ஒவ்வொரு விநாடியும் சுற்றுமுற்றும் உற்றுநோக்கியவண்ணமே இருந்தன. எதிரி கள் கையில் காட்டிக்கொடுப்பதுபோலவே, இதுவரை இருண்டு இருந்த ஆகாயமும் தெளிந்து காணப்பட்டது. மரணத்தை இருகரங்களாலும் எதிர்கொண்டழைத்து ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருந்த அவள் இறப்பதற் காக அஞ்சவில்லை. ஆனால் தான் எண்ணியது முடிக்குமுன் இறந்துபடு வோமோ என்றுதான் பயந்தாள். இவ்வாறு அரைமைல்தூரம் சென்றிருப் பாள். "யாரது?" என்று ஒரு வீரனின் குரல் கணீரென்று அந்த நிசப்தமான நேரத்திலே அவள் காதுகளில் ஒலித்தது. அதைத் தொடர்ந்து குதிரையின் குளம்பொலியும் கேட்டதால்தான் குதிரையைத் திருப்பிக் கொண்டு ஓடுவது முடியாத காரியம் என்பதை அறிந்த அவள் கீழே இறங்கி மறைய எண்ணினாள். ஆனால் இதற்குள் அவனுவந்து இறங்கி னான், இருவருடைய வாளும் அம்மங்கிய வெளிச்சத்திலும் பிரகாசித்தன. வாளைக் கையில் எடுத்ததுமே இருவரும் பகைவர் என்பதை உணர்ந்து கடும் போர் துடங்கினர். நீண்டநேரம் இருவரும் களைக்காது வாள் போர்புரிந்தனர். இளவரசியின் கைகள் சளைத்தன. கால்கள் தாங்க மறுத்தன. தலை சுழன்றது. தள்ளாடித் தள்ளாடித் தன்னைக் காப்பாற் றிக்கொண்டே பின்னிறங்கிய அவள் ஓர் வேர் தட்டி கீழே வீழ்ந்தாள்.

(தொடரும்.)

# பாடக்குறிப்பு

## (P. S. ஞானப்பிரகாசம்.)

வகுப்பு : II. பாடம் : கதை சொல்லல்.

**நோக்கம் :** கதையின்மூலம் நீதியைக் கற்பித்தல். பேச்சுப்பயிற்சி அளித்தல்.

**பீடிகை :** கதையைக் கேட்க உங்களுக்குப் பிரியந்தானே. யாருக்குக் கதையில் பிரியமில்லை, கையை உயர்த்துங்கள்? எல்லோருக்கும் பிரியந்தான். கதை சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள்.

**விஷயம் :—** ஒரு குளத்தில் அநேக தவளைகள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன. ஆனால் அந்த தவளைகள் தங்களுக்கு ஒரு பெரிய குறை இருப்பதாகக் கண்டன. அந்தக் குறை என்ன தெரியுமா? அவைகளுக்கு அரசன் இல்லாத குறைதான். இந்தக் குறையை நீக்கிக்கொள்ள எல்லாத் தவளைகளும் ஜூபிட்டர் கடவுளிடம் முறையிட்டன. “ஆண்டவரே, நாங்கள் அரசன் இல்லாத குடிகளாயிருக்கிறோம். பார்க்கிறவர்கள் எங்களை கேலி செய்கிறார்கள். எங்கள்மீது இரக்கம்வைத்து ஓர் அரசனைக் கொடும்” என்று கேட்டன.

ஜூபிட்டர் அவைகளுடைய வேண்டுகோளுக்கு சம்மதித்து ஒரு அரசனைக் கொடுப்பதாகச் சொல்லி அவைகளை அனுப்பினார். தவளைகளும் சந்தோஷமாக தங்களுடைய குளத்திற்கு வந்தன. அவைகள் வந்த சில நிமிஷங்களுக்குப் பிறகு கடவுள் ஒரு மரபொம்மையை திடீர் என்று குளத்தில் போட்டார். இந்த சத்தத்தைக் கேட்டதும் தவளைகள் பயந்து ஓடி ஒளிந்துகொண்டன. பயம் தெளிந்தபிறகு தவளைகள் ஒவ்வொன்றாக வெளியே வந்தன. தங்களுடைய அரசனைப் பார்த்து ஆனந்தம் அடைந்தன. மெதுவாக அரசனிடம் வந்தன. அரசன் அசையாமல் இருந்தார், வாயை திறக்கவில்லை, மூச்சுகூட விடவில்லை. தைரியசாலியான ஒரு தவளை மெதுவாக அரசனிடம் போனது. அரசன் ஒன்றும் பேசவில்லை. அவர்மீது ஏறி உட்கார்ந்தது, மற்ற தவளைகளும் அவ்விதமே செய்தன. இந்த அரசன் சரியாக ஆளவில்லை, இதனால் தவளைகளுக்கு சலிப்பு ஏற்பட்டது.

தவளைகள் மறுபடியும் ஜூபிட்டரிடம் போய் முறையிட்டன. “ஆண்டவரே, நீர் கொடுத்த அரசன் ஒரு முட்டாள். ஒன்றும் தெரியவில்லை. பேசவுமாட்டார், அசையவுமாட்டார். ஆகையால் சுறுசுறுப்புள்ள வேறொரு அரசனைக் கொடும்” என்று கேட்டன. தவளைகளுக்கு நல்ல புத்தி கற்பிக்கும்படியாக ஒரு விஷப்பாம்பை அரசனாகக் கொடுத்தார்.

புதிய அரசனைக் கண்ட தவளைகள் ரொம்ப சந்தோஷம் அடைந்தன. ஆனால் இந்த அரசன் தினமும் ஒரு தவளையாகச் சாப்பிட்டுக் கொண்டுவந்தது. இந்தக் கொடிய செயலைக்கண்ட தவளைகள் பயந்து

ஜூபிட்டரிடம் ஓடிப்போய் "ஐயோ ஆண்டவரே எங்கள்பேரில் இரக்கமாயிரும். புதிய அரசன் எங்களைக் கொன்று சாப்பிடுகிறார்: எங்களுக்கு பழைய அரசனே போதும்," என்று கெஞ்சிக் கேட்டன.

ஜூபிட்டர் கோபம்கொண்டு அரசன் இல்லாததை ஒரு பெரிய குறையாக நினைத்து என்னிடம் முறையிட்டீர்கள், ஒரு நல்ல அரசனைக் கொடுத்தேன். அந்த அரசனைக்கொண்டு நீங்கள் திருப்தி அடையாமல் சுறுசுறுப்புள்ள வேறொரு அரசனைக் கேட்டீர்கள். அப்படியே சுறுசுறுப்புள்ள அரசனைக் கொடுத்தேன். இப்போது அந்த அரசன் கொடியவன், எங்களுக்குப் பழைய அரசனையேக் கொடும் என்று கேட்கிறீர்கள். நான் "வேறு அரசனைக் கொடுக்கமாட்டேன் ஓடிப்போங்கள்" என்று சொல்லி தவளைகளைத் துரத்திவிட்டார். தவளைகள் கஸ்தியோடு வீடு திரும்பின.

கதையின் நீதி :—இருப்பதைக்கொண்டு திருப்தி அடையாமல் அதிகமாக ஆசைப்பட்டால், அதிக நஷ்டம் உண்டாகும்.

முறை :—பிள்ளைகளோடு பிள்ளையாயிருந்து அவர்களுக்கு ஏற்ற எளிய நடையில் தகுந்த சைக்கினைகளுடன் சொல்லுதல். அவர்களுடைய கவனத்தைப்பெற இடையில் கதை சம்பந்தமாக்க கேள்விகள் கேட்டல். கதைச்சொல்லி முடித்ததும் பிள்ளைகளை வரிசையாக கதையைத் திருப்பிச் சொல்லும்படி செய்தல். பிறகு ஒவ்வொரு பையனும் ஒரு வாக்கியமாக கதையை முதலிலிருந்து கடைசிவரையில் சொல்லும்படி செய்தல்.

---

## ஒன்பது செய்யும் விந்தை

R. AROKIASAMY, Teacher R. C. School Pannirkulam.

$$1 \times 9 + 2 = 11$$
$$12 \times 9 + 3 = 111$$
$$123 \times 9 + 4 = 1111$$
$$1234 \times 9 + 5 = 11111$$
$$12345 \times 9 + 6 = 111111$$
$$123456 \times 9 + 7 = 1111111$$
$$1234567 \times 9 + 8 = 11111111$$
$$12345678 \times 9 + 9 = 111111111$$

ஒன்பது ஒரு விசித்திரமான எண் அல்லவா? இதற்கு அபூர்வமான சில குணங்கள் உண்டு. இதைப்போன்ற அபூர்வமான குணங்கள் உள்ள மற்றொரு எண்ணையோ, எண்களையோ, கண்டுபிடிக்கக்கூடுமோனால் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!!!

---

# கணிதப்பகுதி

[M. Kulandaiswamy, H. M. Aided Ely. School, Palayam.]

## சராசரி (Average)

$$\text{சராசரி} = \frac{\text{மொத்தம்}}{\text{சங்கியை}}$$ என்பதை விளக்கவும்.

இதற்கு ஏற்ற சந்தர்ப்பங்கள் :—

(1) பிள்ளைகளின் ஆஜர் சராசரி, (2) மார்க்கு சராசரி, (3) வயது சராசரி இவற்றின் உதவியைக்கொண்டு பாடம் ஆரம்பித்து நடத்தலாம். உயர்தர ஆரம்ப வகுப்புகளுக்கு ஜனங்களின் சராசரி வருமானம், சராசரி வரி பொருள்கள் வாங்குவதிலும் விற்பதிலும் சராசரி விலை இவற்றைச் சம்மந்தப்படுத்தி கற்பிக்கவும். இதன் உபயோகத்தை நன்கு விளக்கி நோக்கத்தை நிறைவேற்றவும்.

## சதவீதம்

இதற்கு அனுகூலமானது பொது ஜனங்களுக்குள் எழுதிக்கொள்ளும் பிராம்சரி நோட்டு அதில் வட்டி ரொக்கம் கண்டுபிடிக்கவும் வியாபார சம்பந்தமாக லாப நஷ்டங்கள் இந்த விஷயங்களுக்கு மெத்த அவசரம்.

## சதவீதத்தின் அர்த்தம்

பின்னத்தைச் சம்பந்தப்படுத்தி விளக்கவும். சதம் $= 100$, வீதம் $=$ கணக்கிடல் என்று அர்த்தம் என்பதை விளக்கவும். உ-ம். $\frac{1}{2}$-யை நூறு பாகமாக்க 100-ல் 50 ஆகும். $\frac{1}{2} = \frac{50}{100} = 50$ சதவீதம் (%) இந்தக் குறியின் அர்த்தத்தை விளக்கவும். இதன் உபயோகம் : வரவு செலவு கணிக்கவும் லாபநஷ்டம் கண்டுபிடிக்கவும் வகுப்பு ஆஜர் முதலியவைகளுக்கு உபயோகம்.

## மனக்கணக்கு

கணக்கை மனதாலேயே செய்து விடை கண்டுபிடிப்பது மனக்கணக்காகும். ஒரு கணக்கை எழுதி அதன் வகைகளையும் மனதில் யோசித்த பிரகாரம் வகையுடன் செய்து (எழுதி) விடை கணிப்பது எழுத்துக் கணக்காகும். ஆரம்ப வகுப்புகளுக்குக் கணக்குகள் மனக்கணக்காக இருத்தல் நலம். எழுத்துக்கணக்கு சொற்பம் வேண்டும். மேல் வகுப்புகளுக்கு எழுத்துக்கணக்கு அதிகம் வேண்டும்.

**இதனால் ஏற்படும் நன்மைகள் :—**

(1) பிள்ளைகளின் முன்னறிவைச் சோதிக்கலாம். (2) குறிப்பிட்ட கணக்கு வழியைக் கண்டறிய அவசியம். (3) பிள்ளைகள் பாடத்தில் கற்றறிந்த விஷயத்தைச் சோதித்தறிவதற்கு இது பயன்படும். (4) பிள்ளைகள் கற்ற விதிகளை ஞாபகப்படுத்திக்கொடுப்பதற்கு மனக்கணக்கு பெரிதும் பயன்படும். (5) பிள்ளைகளின் யோசனு சக்தியை விருத்திசெய்ய சிறந்த சாதனம். (6) கணக்கு விதிகளை விரைவாகச் செய்ய சிறந்த சாதனம்.

(அடுத்த இதழில் கணித புத்தகத்தைப்பற்றி வெளிவரும்.)

# செஞ்சிவீரனும் அவனது கோட்டையும்

[Louis. M. Selvaraj, Secretary, R. C. T. S. Dramatic Association]

தென்னிந்தியாவின்கண் அணிநகரொன்று நான்கு பக்கங்களிலும் கல்லரணால் சூழப்பட்டு சிறப்புடன் தோன்றுகிறது. அந்நகர் நம் சரித்திரத்தில் முக்கிய இடம்பெறுகிறது. சற்று அந்நகரத்தைக் கூர்ந்துநோக்குவோம். அருமையானகோட்டை ஏறக்குறைய 600 அடி உயரமுள்ள மூன்று செங்குத்தான குன்றுகளுக்கிடையில் அமைந்துள்ளது. இம் மூன்று குன்றுகளின் நாமதேயங்களை விசாரிக்குங்கால் முறையே, ராஜகிரி, ரத்னகிரி, சிருங்காரகிரி என மூன்றும் மூக்கோணவடிவமாக கைகோர்த்துக்கொண்டு, பெருமையுடன் பதில் பகர்கின்றன. சற்று அப்பால் செல்வோம். சலவைக்கற்களால் ஆக்கப்பட்ட அழகிய அரண்மனை; வனப்புள்ள வண்ண வில்லிமலர்கள் நிரம்பியசிங்கார உல்லாசவனங்கள். ஆம், உண்மையாகவே இத்தகைய வலியமைந்த செஞ்சிக்கோட்டைக்கிணையான கோட்டையொன்று கர்நாடக தேசத்திலேயே இல்லையென்றால் மிகையாகாது.

இன்னும் சிற்பக்கலைபொதிந்த, இக்கோட்டையின் பூர்வீக வரலாற்றைப்பற்றி வினவுவோம். தஞ்சையில் ஆண்ட சோழமன்னர்களுக்குப் பலமுள்ள இருப்பிடமாகவும், தனது மலையரணால் அம்மன்னர்களைப் பகைவரின் கைப்படாவண்ணம் பன்முறையும் காத்துவந்ததாகவும், சில சமயங்களில், தான் மகம்மதியரின்சொத்தாகவும், சிலசமயங்களில் மஹாராஷ்டிரர்களின் நீண்டஉறைவிடமாகவுமிருந்ததாக பெருமிதத்துடன் பதில் உரைக்கின்றது.

தனித்தலைமைபூண்ட சிரோப்ஸிங் தனது மனைவி ரம்பாவோடு அரசாட்சி செய்துவருகின்றான். இருவருக்கும் வெகுநாட்கள் புத்திரப்பேறில்லாது வருந்தி, தானங்கள் பல செய்தும், புண்ணியஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்தும், அதன்பலனாக ஓர் இனிய மகவைப்பெற்றெடுத்தனர். அப்பாலன் பெற்றோர் மகிழ, உற்றோர் வியப்புற, மற்றோர் மயங்க, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வருகிறான். கல்வியிலும், போரிலும் வல்லவனாய்த்திகழ்வதுடன் யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றைத்திறம்படக்கற்றான். இப்பாலன் யாரென்று ஆராய்வோம். இவனே தம் பதினாறுவது வயதில் வெற்றிவேங்கையை வேல்கொண்டு வென்றவன்; யாவராலும் புகழப்பட்ட அஞ்சாநெஞ்சம் படைத்த அயல்நாட்டு வீரனொருவனை மல்யுத்தத்தில் தோற்கடித்தவன்; சுற்று வட்டாரமன்னர் புதல்விகள் பலரும் மயக்கங்கொள்ளும்படியான விரிந்தமார்பையும், திரண்டதோள்களையுமுடைய சிங்காரவனப்பினன்; திமிர்கொண்ட வெம்சிங்கத்தின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த துகிலை அவிழ்த்துப் புகழ்மாலை சூடிய புருஷோத்தமன்; ஷா ஆலத்தின் அடங்காப்பரியை, தன் தந்தையாலும் அடக்கமுடியாதுதான் அடக்கி டில்லி மாநகரவாசிகளால் பெரிதும் போற்றப்பெற்று, அதன்பரிசாக இளம்

'ரத்னுபாய்' என்ற அணங்கை மணந்த க்ஷத்திரியகுலவீர ராஜன்; தனது 22-வது வயதிலேயே சீரிய சிங்காதனத்தில் வெண்கொற்றக்குடையுடன்வீற்றிருந்து, வீரதிலகமாகவிளங்கியவன்; நவாப்பால், தோன்றமல்லண என்பவன் கப்பப்பணம் வாங்கிவரும்படி அனுப்பப்பட்டு தன் எதிரே நின்றமல்லண்ணவைநோக்கி, 'ஆண்பிள்ளையானல் பகுதிப்பணத்தைப் போரில் வென்றுகொள்ளட்டும்' என்று வீரமொழி கூவியழைத்தவன்; ஆற்காட்டு நவாப்பின் அக்கிரமத்தை அடக்கி ஒடுக்கியவன்; மேல்நாட்டு வணிக வெள்ளையரின்மனத்தில் திகிலையூட்டிய தீராதிதீரன்; இறுதியாக தென்னுட்டின் அரும்பெரும் வீரத்தியாகியாக, வெற்றிமாலையுடன் தன் பாரதத்தாய்க்குத் தன் உயிரைத் தத்தஞ்செய்த பெரியோன். அவன் யார்? அவனே 'தேஜஸ்ஸிங்' என்னும் தேசிங்கு ராஜனுவன். இப் பேர்ப்பட்ட வலியவீரனை அரசனுகக்கொண்ட செஞ்சிக்கோட்டையின் பெருமைதான் என்னே!

ஆகவே இவ்வித வலியகோட்டையின் பல்நெடும் பழம் பெருமையையும், அவற்றின் சிற்பக்கலைகளையும் மாணவ, மாணவிகள் ஒவ்வொருவரும் உல்லாசப்பிரயாணமூலமாகச்சென்று கண்டுகளித்தலவசியம். கல்வியாகிய பூஞ்சோலையில் அழகும் எழிலும்பெற்று; கண்ணையுங் கருத்தையும் கவர்ந்து, அலர்ந்திருக்கும் பல மலர்களாம் சிற்ப ஓவியக்கலைகளைக்கண்டு, நுகரவேண்டுமென்னும் அவா மாணவர்களுக்கு இயல்பாயுண்டு. அவ்வவாவுக்கேற்ப, பூர்வகால சரித்திர உண்மைகளையும், கல்வெட்டுசாஸனங்கள், செப்புப்பட்டயங்கள், பழங்கோட்டைகொத்தளங்கள், கோயில்கள், நாணயங்கள், முதலியவற்றைச் நேரிற்சென்று காண்பதால், அவர்களின் பண்பட்ட உள்ளங்களில், களத்தில்போடும் தேசபக்தியாகிய விதைமுளைத்து வளர்ந்து, தழைத்துச்செழித்துப்பூத்து, பின் சிறந்த தேசப்பணியாளர்களாகிய இனிய கனிகளைக்கொடுக்குமன்றே! பள்ளியிற்பயிலும் பாலர்களுக்கும் தேசிங்கு ராஜனைப்போன்ற, பல தாய்நாட்டுவீரர்களைப்பற்றிப் போதிப்பது எவ்வளவோ சிறந்த பயனையளிக்கும்.

---

## விடுகதைகள்

### இது என்ன?

[V. Rayappan Vembar]

1. திரியாமல் மேயாமல் நின்ற நிலையில் ஒரு குடம் பால்.
2. காட்டிலே கந்தன் பந்தடிக்கிறன்.
3. விரித்தால் தனக்கடக்கம் சுருக்கினல் நமக்கடக்கம்.
4. உலகமெல்லாம் ஒரு கல்லுக்குள்ளே. மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே. மந்திரமெல்லாம் ஒரு முட்டைக்குள்ளே.

---

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

[V. S. Rajan]

தமிழ்நாடு ... சென்னை-600 008
அ0015

ஆழிசூழ் இந்நில உலகின் கண்ணே மானிடராய்ப் பிறந்தது ஒவ்வொருவரும் ஆரோக்கியத்துடனிருப்பதற்கே. மனிதனிடத்தில் இருக்கும் சொத்து சுதந்திரங்களைவிட உயிரே மேலானது. உயிருக்கு அடுத்தபடி ஆரோக்கியத்தைக் கூறலாம். ஒருவன் ஆரோக்கியம் இல்லாமல் போனால் அவன் வாழ்க்கையில் இன்பத்தையடைவதில்லை, அதோடு தனக்கு வேண்டிய காரியங்களைச் செய்ய சக்தியற்றுப்போகிறான். ஆதலின் இவனை ஆதரிக்கப் பிறர் தங்களுடைய அலுவலை விட்டுவிட்டு இவனுக்காக நேரத்தைப் போக்குகின்றனர். இதனால் எவ்வளவோ நஷ்டம் ஏற்படுகின்றது. ஒரு மனிதனுக்கு ஆரோக்கியம் கெட்டுவிட்டால் அதை ஒரு நாளிலாவது 10 நாளிலாவது திருப்பமுடியாது. ஆதலின் உடம்பை நன்றாக கவனித்து ஆரோக்கியமான முறையில் வைத்திருப்பதே மனிதனின் முதற்கடமையாகும். இது அல்லாத சிலர் கண்மூடித் தெய்வங்களாலும், பைசாசங்களாலும், தலைவிதியைப் பொறுத்ததென்றும் சொல்லுகின்றனர். ஆனால் இது நம்பத்தகுந்த விஷயமன்று. தற்கால ஜனங்கள் தங்கள் தங்கள் உடம்பை ஆரோக்கியமாய் இருக்கிறவரையில் அதைக் கவனிப்பதில்லை. திடம் குறைந்து நோய்கண்டு மரணம் நெருங்கும்போதுதான் உடம்பை எப்படி பாதுகாக்கவேண்டுமென்று வகை தெரியாது திண்டாடுகின்றனர். என்ன பிரயோஜனம்! ஒருவன் தன் உடம்பைப் பேணி வளர்க்கும் காலம் இளம்பிராயமே. ஓர் குழந்தை அதிக திடத்தோடும் ஊக்கத்தோடும் இருக்க விரும்பக்கூடிய தாய் தந்தையர்கள் அவர்களுக்கு அந்த குழந்தை தோன்றும் முன்னரே தங்கள் தங்கள் ஆரோக்கியத்தைப்பற்றி கவலை எடுக்கவேண்டும். ஏனெனில் பலமற்ற தாய் தந்தையர்கள் பலமுள்ள குழந்தையைப் பெறமுடியாது.

பல காரணங்களை முன்னிட்டு நோய் மனிதனைப் பீடிக்கின்றன. ஆரோக்கிய விதிகளை மீறி நடப்பதாலும் உடம்புக்கு போஜன வகைகள் சரியானபடி கிடைக்காததாலும் நோய்கள் உண்டாகின்றன. விஷ பதார்த்தங்களை உண்பதாலும், தப்பிதமான வழக்கங்களாலும் உதாரணமாக உணவை அவசர அவசரமாக உண்பதாலும் வயிற்றுக்கு குன்மமும் அஜீர்ணமும் ஏற்பட்டு கஷ்டத்திற்குள்ளாக்கின்றது. உலகத்தில்உள்ள நோயில் பத்திலொரு பங்கு மேற்சொன்ன வகைகளிலிருந்து உண்டாகிறது. மற்ற ஒன்பதும் நோய் கொடுக்கும் கிருமிகளே. இவைகள் மனிதனின் ஜென்ம விரோதிகளே என்பதற்கு சற்றும் சந்தேகமில்லை. இவைகளால் மடியக்கூடியவர்கள் கணக்கற்றவர்கள். மலேரியா ஜுரம், இசிவு ஜன்னி, வைசூரி, சின்ன அம்மை, நாயிருமல், விஷபேதி, க்ஷயம், குஷ்டம், இன்னும் கணக்கற்ற நோய்கள் இவைகளினால் உண்டாகிறது. மேற்சொன்ன கிருமிகள் பயிர்ஜாதி கிருமி என்றும் பிராணி ஜாதி கிருமி என்றும்

M47·37·8

இரண்டு வகை. இவைகள் வெகு நுட்பமாய் இருக்கிறது. ஆயிரமடங்கு பெரிதாகக் காட்டும் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்தாலும்கூட ஒரு சிறிய கடுகளவுதான் தெரிகின்றன. மேலும் ஒரு கிருமியின் மூலம் 10 மணி நேரத்தில் 10 லட்சம் கிருமிகளாக பெருகுகின்றன. ஆகையினால் உடம்பினுள் இக்கிருமிகள் பிரவேசியாதபடி என்ன செய்ய வேண்டுமென்றும் அவைகளை எப்படி அழிக்கவேண்டுமென்றும் அடுத்தபடியாக பார்ப்போம்.

நன்றாய் ஓடவும் பாரமான பல வண்டித்தொடர்களை இழுத்துச் செல்லும் என்ஜினுக்கு நீரும் நிலக்கரியும் வேண்டும், அசையும் பகுதிகளுக்கு எண்ணெயும், தீயறையில் உள்ள சாம்பலையும் கரியையும் எடுத்தும் முக்கிய உறுப்புக்களையும் கெடாதபடி பார்த்துக்கொள்ளுகின்றானே அந்த என்ஜினோட்டி அதேபோல் நம் உடம்பின் உறுப்புக்களை நோயின்றி இருப்பதுபற்றி அதிக கவலை எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது நல்ல உஷ்ணத்தைக் கொடுத்தும், எண்ணெய் தேய்த்தும் புஷ்டியான ஆகாரங்களைக் கொடுத்தும், கழிவான பொருட்களை அடிக்கடி வெளியில் தள்ளியும் தகுந்த அப்பியாசமும் ஓய்வு கொடுத்தும், விஷபதார்த்தங்களும், நோய் கொடுக்கும் கிருமிகள் உடம்பினுள் பிரவேசியாதபடி எப்போதும் கண்ணும் கருத்துமாயிருந்தால் நோய் வரமாட்டா. நீடிய ஆயுளும் ஏற்படும். இவைகளில் ஏதேனும் ஒன்றை கைநெகிழவிட்டாலும் நோய் வந்தே தீரும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

நம் உடம்பு பலவகையான பொருட்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. எலும்புகளில் ஒருவகையான பொருளும் தோலினாலே இன்னொரு வகை. பொருளும் நரம்புகளாலே இன்னொரு வகையான பொருளும் இருப்பதால் இயந்திரம் அசைந்துகொண்டே இருப்பதால் தேய்வு ஏற்படுவதுபோல நம் உடம்பும் அசைந்துகொண்டிருப்பதால் தேய்வு ஏற்படுகின்றன. இந்த தேய்வையும் அழிவையும் செப்பனிடும் பொருள் நாம் உண்ணும் உணவில் இருக்கிறது. அதோடு உண்ணும் உணவிலிருந்தே உஷ்ணமும் ஏற்படுகிறது.

இப்படி ஜீரணமான உணவு இரத்தத்தோடு கலந்தும் அது உடம்பு முழுவதும் இரத்தத்தால் கொண்டுபோகப்படுகிறது. என்ஜினுக்கு உபயோகமற்ற நிலக்கரியைப்போலவே இதுவும் உஷ்ணத்தையும் சக்தியையும் தருகிறது. காயம்பட்ட இடத்தின் வழியாக இரத்தம் செல்லும்போது, தன்னில் உள்ள உணவின் சாரத்தில் இருந்து பழுதுபார்க்கும் பொருளையும் காயம்பட்ட இடங்களுக்கு அனுப்புகிறது. இதனால் நாம் உண்ணும் உணவுப் பொருட்களால் நமது உடம்பு ஆக்கப்பட்டிருக்கிறதென்று தெரிய வருகிறது.

ஆதலால் நாம் உடம்பை சுத்தமாயும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டுமானால் சுத்தமான உணவையும், புஷ்டியான உணவையும் உட்கொள்ளுதல் நலம். நாம் உண்ணும் அரிசி, கோதுமை இன்னும் மற்ற உணவு பொருட்களும் எலும்பாகவும் நரம்பாகவும் மாறுகிறதென்பது ஆச்சரியம்

தான். ஆனால் இது உண்மையாகவே நடப்பதுதான். முற்றிலும் சர்வ சக்தி உள்ளவரும், வானத்தில் உள்ளவருமான கடவுளால் மனிதனுடைய உடம்பு ஆராய்ந்து அமைக்கப்பட்டதென்று காட்ட இதுவே தகுந்த சாக்ஷியாகும். ஏனெனில் உடம்பை வளர்க்கவும் அதற்கு உஷ்ணத்தையும் சக்தியையும் தரவும் இவ்வளவு ஆச்சரியமும் செவ்வையுமான வழி அகஸ்மாத்தாக ஏற்பட்டிருக்க முடியாது, மனிதனும் இதை ஆராய்ந்து செய்திருக்க முடியாது. (தொடரும்.)

---

## விளையாட்டுகள்

M. A. AMIRTHANATHAN, R. C. H. School, Trichy.

### 1. வட்டத்தில் கோ, கோ. (Circle Kho-Kho).

வகுப்பில் உள்ள மாணவர்களை இரண்டு சம பலமுள்ள அணிகளாகப் பிரித்து, அவற்றில் ஒன்றை ஓர் வட்டத்தின்மேல் மாற்றி, மாற்றி, உள்புறம், வெளிப்புறம் திரும்பி உட்காரும்படி செய்யவும். மற்றொன்றை வட்டத்தினுள் நிறுத்தவும்: வட்டத்திற்குள் இருப்பவர்கள் தப்பி ஓடுபவர்கள் (Runners); உட்கார்ந்திருப்போர் அவர்களைப்பிடிப்பவர்கள் (Chasers). குறித்த நேரத்தில் உட்கார்ந்திருப்போரின் கட்சியைச்சேர்ந்த ஒருவன், வட்டத்தை ஒருமுறை வெளிப்புறமாகச் சுற்றியபின், உள்ளே திரும்பி உட்கார்ந்திருப்பவர்களில் ஒருவனை தொட்டு "கோ" என்பான். உடனே தொடப்பட்ட நபர் எழுந்து உள்ளிருக்கும் விரோதிகளை தாக்கமுயல்வர். தொட்டவன் தனக்குப் பதில் தொடுபவனுடைய இடத்தை நிறப்பவேண்டும். தாக்கப்பட்டவர்கள் (Chased) ஆட்டத்தினின்றும் நீங்கவேண்டும்:

**ஒழுங்குகள்:**

1. ஆட்டத்தை ஆரம்பிப்பவன், வட்டத்தை ஒரு முறை சுற்றிய பின்தான் "கோ" கொடுக்கலாம்.
2. "கோ" கொடுக்கு முன் எழுந்து எவரையேனும் தாக்கினால், அது சரியன்று.
3. "கோ" கொடுக்கும்போது கொடுப்பவன் அவசியம், கொடுக்கப்படுபவனைத் தொடவேண்டும்.
4. தாக்கப்பட்டவன் உடனே ஆட்டத்தினின்றும் நீங்கவேண்டும்.
5. தப்பி ஓடுபவர்கள், வெளியே, உள்ளே போகும்போது, உட்கார்ந்திருப்போரை தொடக்கூடாது.

**வெற்றி கணக்கிடும் முறை.** (இரண்டு முறை உண்டு.)

1. ஒரு அணி மற்றைய அணியிலுள்ள எல்லோரையும் தாக்க எவ்வளவு நேரம் பிடிக்கின்றது என்று கணக்கிட்டும்,

2. குறிப்பிட்டநேரத்தில், ஒரு அணி, மற்றைய அணியிலுள்ளவர்களில் எத்தனை பெயரை தாக்கமுடியும் என்று கணக்கிட்டும் அறியலாம்.

## 2. நேர் வரிசை கோ, கோ (Straight line Kho-Kho)

இது "கோ, கோ" வின் மற்றொரு முறையாகும். இம்முறையில் ஒரு அணியை ஒரு நேர் வரிசையில், ஒருவர்க்கொருவர் 5, 6 அடி தூரத்தில் மாற்றி, மாற்றி உட்காரவைக்கவும். மற்றைய அணியிலுள்ளவர்கள் உட்கார்ந்திருப்பவர்களுக்கு இடையிலோ அல்லது எப்படியோ நின்றுகொள்ளலாம். முன்போல், நிற்டோர், ஓடுபவர் (Runners) உட்கார்ந்திருப்போர் (Chasers) பிடிப்பவர்கள். குறித்த நேரத்தில் பிடிப்பவன் ஒரு சுற்று வந்து பின் "கோ" கொடுப்பான். முன்போல் ஆட்டம் தொடரும்.

ஒழுங்குகள் :

1, 2, 3, 4, ஒழுங்குகள் முன்போல்.

5. பிடிப்பவன், வரிசையின் ஒரு புறமாய் ஓடும்பொழுது மறுபுறமுள்ள விரோதிகளைத் தாக்கலாம்.

6. தப்பி ஓடுகிறவர்கள், ஒரு புறமிருந்து மறுபுறம் ஓடும்போது, உட்கார்ந்திருப்பவாகளைத் தொடக்கூடாது.

7. விரட்டுபவன், ஒரு முறை ஒரு திசையில் புறப்பட்டால், மீண்டும் அதே திசையில், திரும்பக்கூடாது.

வெற்றி கணக்கிடும் முறை—முன்போல்.

## 3. வட்டத்தில் பச்சைக்குதிரை தாண்டல் (Circle Leap Frog Relay)

மாணவர்களை இரண்டு சமபாகங்களாகப்பிரித்து, அவர்களை ஒரு வட்டத்தின்மேல், சமபகுதிகளில் நிறுத்தவும். குறிப்பிட்டநேரத்தில் எல்லோரும் குனிந்து கைகளால் கெண்டைக்கால்களைப் பிடித்துக்கொள்ளவே அணிக்கு ஒருவராக, எதிர் எதிரே உள்ள இருவர், தங்களுக்குமுன்னுல் தங்களின் அணியைச் சேர்ந்தவர்களின் முதுகளின்மேல் கைகளைவைத்து தாவியும், விரோதிகளின் அணியை அடைந்தவுடன் அதைச்சுற்றி வெளிப்புறமாக ஓடியும், முடிவில் தனக்குமுன் நிற்பவனைத்தொட்டு தன்னுடைய இடத்தில் குனிந்து நிற்கவேண்டும். இரண்டாமவன், தனக்குமுன்னுள்ள நண்பர்கள்மீது பச்சைக்குதிரை தாண்டியும், விரோதிகளின் அணி ஓரமாய் ஓடியும், தன் அணியின் முதல்வனைத்தாவியும், தன் இடமடைந்து மூன்முவனைத் தொடவேண்டும். இப்படியே, அணியிலுள்ள எல்லோரும் செய்து, எக்கட்சி முதல் ஸ்தானத்தை அடைகின்றது என்று கண்டுபிடிக்கவும்.

## ஏழையின் கண்ணீர்

[ஹென்றி]

### 2. மனச்சாந்தி

மீனுவின் வீட்டுத்தோட்டத்தில் உள்ள ஒரு பழைய கட்டிலில் பிரேம்குமார் உட்கார்ந்திருந்தான். அவனது இளஇதயத்தில் தாயின் மரணப்படுக்கையான சோக நிகழ்ச்சி ரணத்தை ரம்பங் கொண்டு அறுப்பதுபோல் தோன்றியது. சித்திரவதை செய்யும் அவனது இதய அலைகள் வறுமை—காதல்—தாயின் அந்தியகாலம் இவைகளையே அவன் மனக்கண் முன்பு கொண்டுவந்தன! சற்று தூரத் தில் லைலா உட்கார்ந்திருந்தாள். அவள் அவனையே வெறிக்கப் பார்த் துக்கொண் டிருந்தாள். குமாரின் கண்கள் லைலாவை பார்க்கத் துடித் தன!...ஆனால் அந்த பாழும் வறுமை...?—அதற்கு இடங்கொடுக்க வில்லை. அவன் கண்களிலிருந்து வடியும் நீரைக்கண்டு சகியாத லைலா "அத்தான்" என்றாள். பிரேம்குமாரின் இதயத்தில் பட்டமரம் துளிர்ப்பதுபோல் ஒரு பசுமை மெருகேறியது அந்த "அத்தானல்" லைலா மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

"அத்தான்!...,ரகுநாதன் எங்கே?.."

"டாக்டர் ஜெகதீஸனிடம் போனான் இன்னும் காணோம்......"

"ஜெகதீஸனிடமா?......அடடா! அவர்...அதிக பீஸ் கேட் பாரே!...உங்கள் தாயார் கவலை அதிகமாக இருக்கிறது..... இருந்தா லும் தாயன்புக்கு ஈடு..."......(இடை மறுத்து சலிப்புடன்) ..."ஸ்தௌ! தாயன்பு...தாயன்புதான்!......வாழ்க்கையில் வாழ வழிகாட்டிய தாயின் விருப்பத்தை நிறைவேற்றமுடியாத நான் ஒரு மனிதனா?......இல்லை!...மனிதன்...ஆனால் மடையன்!"

உங்கள் தாயின் விருப்பம் என்ன அத்தான்?......ஏன் உங் களையே நொந்துகொள்ளுகிறீர்கள்?......தாயின் ஆத்மசாந்திக்கு வழி வகுக்கவேண்டியது உங்கள் கடமை. ஏன்?—உரிமையும் கூடத் தானே?"

"ஆமாம். உரிமையும்—கடமையும் அதுதான். என் தாய் எனக் கும்; ரகுநாதனுக்கும் திருமணம் முடிக்க விரும்புகிறார்கள்..........

"நியாயம் தானே?...உலகத்தில் தான் பெற்று வளர்க்கும் பிள்ளைகளுக்கு தனக்குப்பின் பாதுகாக்கவும்—மக்களின் மன மகிழ்ச் சிக்காக மனைவிகளை நியமிப்பதில்தானே மனம் செல்லும்...அதில் உங் களுக்கு என்ன தடை?...உங்களிருவருக்கும் இரு பெண்கள் கிடைக் காமலா போய்விடப் போகிறார்கள்?..."

"கிடைப்பார்கள்...(பெருமூச்சுடன்)...ஆனால் என் மனம் சம் மதிக்க வேண்டாமா?..."

"எதற்கு?..."

"........."

"ஏன் மௌனம்?... தங்கள் மணம் யாராவது குறிப்பிட்ட ஒரு பெண்மணியை நாடுகிறதா?...."

"...ஆ..ம்..."

"அப்படியானல் அவளை மணம் செய்ய என்ன தடை?"

"..(தலைகுனிந்துகொண்டே) ... வறுமை!...

"அவள் யார்?.... உங்கள் தாய்க்கு அவளைத் தெரியுமா?.... உங்கள் தாயின் சம்மதம் என்ன?.... அவளுக்கு அது சம்மதமா?.... சொல்லுங்கள்! .... அத்தான்! .... (கண்ணீர் வழிய) சொல்லுங்கள் இதோ நான் என் நகைகளை விற்று உங்களுக்கு ரூ. 1000 தருகிறேன். உங்கள் திருமணத்தை நடத்திக்கொள்ள இது உதவும்... அத்தான். (ஆழ்ந்த பெருமூச்சுடன்) உங்கள் க்ஷேம வாழ்க்கை என் ஜீவநாடி! அதுவே நான் விரும்புகிற லட்சியம்!! .... அத்தான்! என் லக்ஷிய கோட்டை இடிந்ததா? ... அத்தான் .... உங்கள் மனம் விரும்புகிற வனிதை யார்? .... சொல்லுங்கள் ...." என்று கூறிக்கொண்டே அவனை நெருங்கினாள் லீலா.

பிரேம்குமார் அசையாமல் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான். அந்நிலையில் அவனுக்கு அவளது பேச்சு ஒரு புதிராகவே இருந்தது. "லீலா! அவள் யார் என்று அறிந்தால் நீ—நீமட்டு மல்ல உலகமும் சிறிக்கும். பாலைவனத்திலுள்ளவன் பசுஞ்சோலையை நினைத்து பெருமூச்சுவிட்டுப் பயன் என்ன?..லீலா!.. என்னிதய லீலா!..." என்றான். லீலா, "அத்தான்" என்று கூறிக்கொண்டே அவனது கரங்களைப்பற்றினாள். அவனிதயம் ஆனந்தத்தால் விம்மியது. பிரேம்குமார் ஆனந்த மிகுதியால் "லீலா!...என்னருயிர் லீலா!. ....என்னிதய ராணி..... பிரேமையின் ஜுவாலை ..... தியாகச் சுடர்........ நான் விரும்பும் பெண் நீதான்..." என்றான். லீலா "அத்தான்" என்று கூறிக்கொண்டே அவனது அரவணைப்புக்குப் பாத்திரமானாள். சிறிது நேரம் உலகை மறந்த அவ்விருவரும் திடுக்கிட்டு மீனாவை நினைத்தனர். லீலா பிரேம்குமாரின் பிடியிலிருந்து விலகினாள். மீனாவின் அறையிலிருந்து "குமார்—லீலா" என்ற சப்தங்கள் வரவே இருவரும் வேகமாக அறையை நோக்கி நடந்தனர்.

பாலு மீனாவின் படுக்கையண்டை அமர்ந்திருந்தார். மகளும், குமாரும் வருவதைக்கண்டதும் மீனாவின் முகத்தைப் பார்த்தார். மீனாவின் முகம் மலர்ந்தது. அவள் பலஹீனமான நிலையிலிருப்பதை கண்ட பாலு அவள் எழுந்திருப்பதற்கு செய்யும் பிரயத்தனங்களைத் தடுத்து குமாரையும் லீலாவையும் அவளருகில் அழைத்தார். இருவரும் அவளருகில் வந்து நின்றனர். மீனா லீலாவின் கரத்தைப் பிடித்து பிரேம் குமாரின் கரத்தில் வைத்தாள். இருவரும் தலை குனிந்துகொண்டே நின்றனர். மீனா புன்னகை பூத்த முகத்துடன் கண்களை மூடினாள். அச்சமயம் டாக்டர் ஜெகதீஸனுடன் ரகுநாத

னும் உள்ளே நுழைந்தான். லீலாவின் கரத்தை குமார் நழுவவிட்டான். டாக்டர் மீனுவை பரிசோதிக்க ஆரம்பித்தார்.

*　*　*　*　*

"என்னவா? ... சரிதான்! தாயின் நிலைமைக்காக கண்ணீர் வழியக் கதறினரே!... அப்பொழுது அந்த இரக்கம் என்பது எங்கே சென்றது?... அப்பா!... ஏழையின் கண்ணீர் கூரிய வாளில்லையா? ... செல்வந்தர்களே செல்வத்திற்காக பிழைக்க வைக்கின்றீர்களே! ஏழைகளின் கதி? அப்பா! அவரின் களங்கமற்ற மனத்தின் கடுஞ் சாபத்தை ஏன் வாங்கிக்கொள்ளுகிறீர்கள்?" என்று கூறிக்கொண்டே சாந்தி இருக்கையில் கண்ணீருடன் ஓடிவந்தான் ரகுநாதன். ரகுநாதனைக் கண்டதும் சாந்தி உள் அறைக்குச்சென்று கதவு ஓரத்தில் நின்று கொண்டு ரகுநாதனையே பார்த்துக்கொண்டிருந்தாள். சாந்தியைக் கண்டு ஒரு பெண் முன்பு கண்ணீர் விடுகிறோமே என்று திடுக்கிட்டானு யினும் அவனது தாயன்பு கண்ணீரை தடைசெய்யவில்லை. ரகுநாதன், "டாக்டர்! இந்தாருங்கள் இதுவரை கொடுத்ததற்கு பீஸ்...டாக்டர் என் தாய் மூச்சு இழுத்து இழுத்து விடுகிருள். சீக்கிரம் வாருங்கள்" என்று கதறிக்கொண்டே 30 ரூபாயை எடுத்து டாக்டருக்கு முன்னுல் வைத்தான். டாக்டர் பணத்தைக் கண்டவுடன் ரகுநாதனை ஒருமுறை பார்த்தார். அவன் கண்களிலிருந்து பரிதாபமாக வழியும் நீரைக் கண்டதும் அவர் மனம் இளகியதாயினும் அவரது வாழ்க்கைக்கு அதுதானே வரவு? ஆதலால் பணத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போனுர்.

சாந்தி தன் தந்தை உள்ளே வருவதைக்கண்டதும் கட்டிலில் போய் படுத்துக் கொண்டாள். ஜெகதீஸன் உள்ளே போய் மருந்து பாட்டில்களை எடுத்துக்கொண்டு ரகுநாதன் பின் தொடர மீனுவின் வீட்டிற்குப்போனுர். சாந்தியின் இதயம் ரகுவை பின் தொடர்ந்தது. அவளையறியாமலேயே அவள் மனம் ரகுநாதனுல் பறிக்கப்பட்டது.

பால சுந்தரத்தின் மனைவியான வீணும்பாள் தன் அண்ணன் வீட்டிலிருந்து வந்து வீட்டிற்குள் நுழைந்தாள். வீடு நிம்மதியாக இருந்தது. வேலைக்காரனைக்கேட்டாள். வேலைக்காரன் "ஐயாவும் சின்ன அம்மாளும் அவங்க தங்கச்சிக்கு ஆபத்தாக இருக்குன்னு போயிட்டாங்க சொல்லச் சொன்னுங்க! ... பாவம்! குமாரய்ய ரொம்ப அழுதாருங்க..." என்று வேலைக்காரன் கூறிக்கொண்டே போகையில் ஆத்திரமடைந்த வீணு "சரி! சரி! விதியற்ற பண்டாரங்களெல்லாம் சாககிடக்கிறதுன்னு இவாள்ளாம் போயிட்டாங்களா?...எவள் செத்தால்தான் இவங்களுக்கென்ன என்று கேட்கிறேன்!... அழுதானும்... அழுகை !...அவஇருந்து இவனுக்கென்ன வருகிறதாம்!... வரட்டும் சொல்றேன்!...இரண்டில் ஒன்று!" என்று கூறிக்கொண்டே கைகேயியைப்போல அவதாரம் எடுத்து கட்டிலில் படுத்துக்கொண்டாள்.

வேலைக்காரன் மனத்தில், "தங்கக்கம்பியான ஐயாவுக்கு பாவம் இப்படிப்பட்ட ராக்ஷஸியா வாய்க்க வேண்டும்?" என்று நினைத்துக் கொண்டே போய் தன் வேலையை கவனிக்கப்போய் விட்டான். அவன் மன எண்ணத்தை எடுத்துச் சொல்ல அவனுக்கு உரிமை ஏது?

கட்டிலில் படுத்திருந்த வீணுவின் மனம் நிம்மதியிலில்லை. "அவர் தான் போனூர். இவள் ஏன் ஓடவேண்டும்?...ஏதோசதிதான் நடக்கிறது. அந்த பிச்சைக்காரப்பயலுக்கு என் மகள் லேலாவை ஒரு வேளை கேட்டாலும் கேட்பாள். இவன் சம்மதித்து விட்டால் இந்த வீட்டில் எனக்கென்ன வேலை?...வரட்டும் சொல்லுகிறேன். இரண்டில் ஒன்று!..." என்று முனகிக்கொண்டே இருந்தாள். அவள் மனம் தன்னைக் கேட்காமல் பாலு சென்றதற்காக கொந்தளித்துக் கொண்டே இருந்தது. மணியும் 5 அடித்து! வேலைக்காரன் மெது வாக உள்ளே வந்து "அம்மாவும்; ஐயாவும் வர்ராங்க" என்றுன். "வரட்டும் சொல்லுகிறேன்" என்று எழுந்த வீணுவைக்கண்டதும் வேலைக்காரன் பயந்து கொண்டே வெளியே போய் விட்டான். பாலுவும், லேலாவும் வந்தனர். இருவரும் வருவதைக்கண்டு வேலைக்காரன் மெதுவாக அவர்களிடம், "பெரியம்மா கோவமாயிருக்காங்க" என்றுன். புன்னகைப்பூத்துக் கொண்டே பாலுவும், லேலாவும் உள்ளே நுழைந்தனர். லேலாவின் முகத்தில் ஆனந்தக்களிப்பு படர்ந்து அழகுக்கு அழகு செய்தது! அகத்தின் அழகுதானே முகத்தில் தெரியும்?

ராக்ஷஸி போல் நின்றுக்கொண்டிருந்த வீணுவைக்கண்ட பாலுவும், லேலாவும் அசட்டையாக அவளைக்கடந்து சென்றனர். எரிகிற நெருப்பில் அந்த அலட்சியம் எண்ணெய்போல் ஆயிற்று! ஆத்திரத்துடன்; "அடக்கம் ஆகி விட்டதா? துக்க நிவர்த்தி என்றைக்கு?" என்றுள் வீணு. பாலு நிதானமாக, "துக்க நிவர்த்தி தற்சமயம் இல்லை. விவாக முகூர்த்தம்தான் வருகிற வெள்ளி எட்டுக்கும் நடக்கும்" என்றுர். வீணு திடுக்கிட்டு, "விவாஹமா?... யாருக்கு ...?" என்றுள். பாலு பொறுமையாக; "லேலாவிற்கும் பிரேம்குமாருக்கும்தான்!" என்றுர். வீணு 'கோ' என ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள். "என்னைக்கேட்காமல் இந்த வீட்டில் வால்கள் எல்லாம் தன் னிஷ்டப்படி துள்ளுகிறதே! இனி எனக்கிங்கே என்ன வேலை? நீங்களும் உங்கள் மகளும், பிச்சைக்கார மருமகனும், அந்த சம்மந்தியோடே வாழுங்கள். இதோ! நான் போகிறேன்...எனக்கு ஒரு ஆறு—குளம் இல்லையா அடைக்கலம் கொடுக்க..." என்று கூறிக் கொண்டே வெளியே போகப்புறப்பட்டாள். லேலா தன் தாயைக் கூர்ந்து பார்த்தாள்! "அம்மா!" என அலறினுள். வைராக்கிய வீணும் பாள் செல்வச் செருக்கால் மகளையும்—அவளது கதறுதலையும் பொருட்படுத்தாமல் வீட்டை விட்டு வெளியேறினுள். அப்பொழுது மாலை 6 மணி இருள் மெல்ல பூமியைத் தழுவியது! (தொடரும்.)

# நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

## பாடசாலை உல்லாசப் பிரயாணம்

எமது பாடசாலையிலுள்ள எலிமெண்டரி, செகண்டரி கிரேடு, எமர்ஜென்சி ஆசிரிய மாணவர்கள் எல்லோரும் ஜனவரி மீ 30-ம் யன்று உல்லாச பிரயாணமாக பல்வேறு இடங்களுக்குச் சென்று திரும்பினர். மாணவர்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதியினர் மேட்டூர், சேலம் முதலிய இடங்களுக்கும், மற்றொரு பிரிவினர் நாகை, தஞ்சை முதலிய ஊர்களுக்கும், மூன்றாவது பகுதியினர் மதுரை, பசுமலை, திருப்பரங்குன்றம், திண்டுக்கல் முதலிய இடங்களுக்கும் சென்று உல்லாசப் பிரயாணத்தால் அடையும் பயன்களைப் பெற்றனர்.

சுமார் 60 பேர் மேட்டூருக்குச் சென்று அங்குள்ள முக்கிய இடங்களாகிய ரசாயன பொருள் உற்பத்திசாலை, எலக்டிரிக் பவர்ஹவுஸ், ட்ரெயினிங் ஸ்கூல், மாபெரும் மேட்டூர் அணை, கவர்னர்பிரானின் பங்களா, உல்லாச வனங்கள் முதலியவற்றைக் கண்டுகளித்து, சேலம் சென்று ஆங்கு சுகவனேஸ்வர ஆலயம், விக்டோரியா மார்க்கெட், லிட்டில் பிளவர் ஹைஸ்கூல் முதலிய முக்கிய இடங்களையும் கண்ணுற்று ஞாயிறு காலை திருச்சி திரும்பினர்.

தஞ்சை, நாகை முதலிய இடங்களுக்கு சுமார் 75 பேர் வரை சென்றனர். நாகையில் ரோலிங் மில்ஸ், டச்சுக்கோட்டை, ட்ரெயினிங் ஸ்கூல், துறைமுகம் முதலிய இடங்களையும், தஞ்சையில் பிரகதீஸ்வரர் ஆலயம், பண்டைய அரண்மனை, கோட்டைகள் முதலியவைகளையும் கண்டுகளித்தனர். பின்னர் நாகையிலிருந்து வேளாங்கண்ணிக்கு கடற்கரையோரமாகச் சென்றது கண்கொள்ளா காட்சியாயிருந்தது. அங்குள்ள கடற்கரையின் மேல் நிற்கும் மாதாகோவில் கண்ணைக்கவரும் காட்சிகளில் ஒன்றாகும்.

மூன்றாவது பிரிவினர் பாண்டிய நாட்டிற்குச் சென்று அந்நாட்டின் தலைநகராகிய மதுரையம்பதியிலுள்ள முக்கிய இடங்களாகிய திருமலை நாயக்கர் மஹால், மீனாட்சியம்மன் கோவில், அமெரிக்கன் கல்லூரி, மதுரைக் கல்லூரி செயின்ட் மேரிஸ் உயர்தர பாடசாலை இவற்றை கண்ணுற்றனர். அந்திவேளை வண்டியூர் தெப்பக்குளம் இனிய காட்சியை அளித்தது. பின்னர் பசுமலை விரைந்து, ஆங்கு மலைச்சரிவில் மாண்புடன் விளங்கும் போதனாமுறை பாடசாலை, உயர்தரபாடசாலை இவற்றையும், விசேஷமாக போதனாமுறைப் பாடசாலையில் நடைபெற்ற கிண்டர் கார்ட்டன் வகுப்பு தமிழ் போதனையும், விளையாட்டு முறை கணிதப் போதனையும் பார்த்தவர்களின் கவனத்தைக் கவர்ந்தன. மற்றும் மாணவரும், தலைமை உபாத்தியாயரும் சிறந்த ஒத்தாசை செய்தனர். பின்னர் வரும் வழியில் திருப்பரங்குன்றத்தை தரிசித்து, திண்டுக்கல்லிலுள்ள ஊமையன் கோட்டைமுதலியவற்றைக் கண்டு திருச்சி திரும்பினர்.

படசாலையில் பயிலும் மாணவர்களுக்கு உல்லாசப் பிரயாணம் மிகவும் அவசியமாகும். இதனை அறிந்தே அரசாங்கத்தாரும் கல்வி கலா திட்டத்தில் உல்லாச பிரயாணங்களை முக்ய அம்சமாக கருதி அமைத்திருக்கின்றனர். அவ்வித சிறந்த பிரயாணங்களை மாணவர்களுக்கு பின்னர் தகுந்த படி செயல் முறையில் காண்பிக்க தற்பொழுது ஆசிரிய மாணவர்களுக்கு பழக்கமும் ஏற்படுகிறது. உண்மையாகவே எம் பாடசாலை ஆசிரிய மாணவர்கள் இவ்வுல்லாச பிரயாணத்தால் பயன்கள் பல பெற்று திரும்பினர் என்றால் மிகையாகாது.

இங்ஙனம்,

சென்று, கண்டு களித்த செல்வராஜன்

---

## உனக்குத் தெரியுமா?

[V. ராயப்பன், வேம்பார்]

1. பட்டுப்பூச்சியின் முட்டைகள் 1600 சேர்ந்து எவ்வளவு எடை தெரியுமா? (ஒரு கிராம்தான்)

2. 1-ராத்தல் பட்டுக்கு எத்தனை பூச்சிகள் வேலை செய்யவேண்டும் தெரியுமா? (1600 பூச்சிகள்)

3. ஒரு சொட்டு இரத்தம் நம் தேகத்திலுள்ள தந்துகிகளில் நகர எவ்வளவு நாழி ஆகிறது தெரியுமா? (4-மணி 37-நிமிடம்)

4. இந்தியாவில் ஒரு வருடத்தில் எவ்வளவு உப்பு உற்பத்தியாகிறது தெரியுமா? (20,000 டன்)

5. ரேடியம் என்ற விலையுயர்ந்த பொருளைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா? (கியூரி என்ற பெண்மணி)

6. ஜடவாயுக்கள் என்று சொல்லப்படும் வாயுக்களை கண்டுபிடித்தவர் யார் தெரியுமா? (இராம்லே)

7. மின்சார பல்பைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா?
(தாமஸ் ஆல்வா எடிஸன் என்பவர்)

8. தந்திச்சாதனத்தைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா?
(மோர்ஸ் என்பவர்)

9. "வர்த்தமான பாரதம்" என்ற பெயரில் இந்துதேசச் சரித்திரத்தை எழுதிய உலகப் பிரசித்திப்பெற்ற வங்காளி யார் தெரியுமா?
(சுவாமி விவேகானந்தர்)

10. இந்தியா முழுவதும் மொத்தம் கிராமங்கள் ஏழு லட்சம் எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அவற்றில் சென்னை மாகாணத்தில் மட்டும் எத்தனை இருக்கலாமென்று ஊகிக்கமுடியுமா? (35,932 எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.)

11. இந்தியாவில் சிசுக்கள் சராசரி நிறை எவ்வளவு தெரியுமா? (ஐந்து பவுண்டு)

12. உலகம் முழுவதிலும் ஒரு வாரத்தில் சினிமா பார்க்கிறவர்களின் தொகை எவ்வளவு பேர் என்று கணக்கு எடுத்து இருக்கிறார்கள் தெரியுமா? (23½ கோடி பேர்)

---

## பெற்றோர் சங்கம்

இராமநாதபுரம் ஜில்லா நடராஜபுரம் ராம. ராமசாமிசெட்டியார் கல்வி நிலைய பெற்றோர்சங்கவிழா 24—1—47-ல் திருப்புத்தூர் ரேஞ்சுபாட சாலைகளின் சீனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வி. கம்பன் கனகராஜ் பி. ஏ. எல். டி. தலைமையில் நடைபெற்றது. பாகனேரி ஸ்ரீ ஆர். வி. சுவாமிநாதன் எம். எல். ஏ. தேசீய மூவர்ணக்கொடியை கல்விநிலையத்தில் ஏற்றிவைத்தார்.

நாட்டரசன்கோட்டை பஞ்சாயத்துப்போர்டு நிர்வாக அதிகாரி ஸ்ரீ எம். எம். செல்லையாத்தேவர், பி. ஏ., சிவகெங்கை ராஜாஸ் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ எஸ். பழனிவேலு ஆகியோர் முறையே 'பெற்றோர் யார்?' 'கல்வியும் வாழ்க்கையும்' என்பனபற்றியும், மாணவர்களான எஸ். ராமசாமி டி. பாலகிருஷ்ணன் 'கல்வி', 'தேசமுன்னேற்றம்' ஆகியனபற்றியும் பேசினர். பாரதிதாசனின் 'வீரத்தாய்' நாடகம் மாணவர்களால் சிறப்புற நடைபெற்றது.

மாணவ, மாணவிகளுக்குப்பரிசுகள் வழங்கப்பெற்றபின் சங்கக்காரிய தரிசி ஸ்ரீ கதி. சண்முகசுந்தரம் வந்தனோபசாரத்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

காரியதரிசி.

---

## திண்டிவனம் ஸ்ரீ நாகம்மாள் பெண்பாடசாலை "நினைவுநாள் விழா" (4-ம் ஆண்டு) 22-11-46

சங். ஆரோக்கியநாத சுவாமியார் அவர்கள் தலைமையின்கீழ் நடந்தது. அவ்வமயம் மாணவிகளால் வந்திருந்த பெற்றோர்களுக்கும், மற்றோர்களுக்கும், ஆடல் பாடல்களாலும், இனிய சம்பாஷணைகளாலும், காதுக்கும், உள்ளத்திற்கும் இனிய விருந்தளிக்கப்பட்டது. வித்வான் C. K. முத்து குமாரசாமி முதலியார் அவர்கள் "தற்காலம் பெண்களுக்குத் தேவை" என்றதைப்பற்றி ஒரு இனிய சொற்பொழிவு ஆற்றினர். தலைவரவர்கள் முகவுரையில் பெற்றோர்களின் கடமையைப்பற்றியும், முடிவுரையில் மாணவிகளின் தேர்ச்சியைப்பற்றியும் வெகு அழகாக எடுத்துக் கூறினர். நூல் நூற்றல், விளக்குநடனம், புட்பவளைய தேகாப்பியாசம் போன்ற கேளிக்கை

களைக்கண்டு களித்த தலைவரவர்களுக்கும், ஏனையோருக்கும் தலைமை ஆசிரியர் அப்பாசாமியால் நன்றி கூறப்பட்டு, தேசவாழ்த்துடனும், பட்சண விநியோகத்துடனும் கூட்டம் இனிது முடிந்தது.

Appasami, Manager.

---

## திருவாடானை ஆரம்ப ஆசிரியர் சங்கம்

ஷை சங்க ஆண்டுவிழா 21-12-46 மாலை 2½ மணிக்கு திருவாடானை அடிஷனல் சப் மாஜிஸ்டிரேட் Sri ராமசுந்தரமய்யர் அவர்கள் தலைமையில் திருவாடானை போர்டு ஆண்பாடசாலையில் நடைபெற்றது. சங்கக்காரிய தரிசி அவர்களால் ஆண்டுவிழா அறிக்கை வாசிக்கப்பட்டபின் மாணவ மாணவிகளால் நாடகம், சம்பாஷனை, உபந்நியாஸம், கும்மி, கோலாட்டம், டான்ஸ் முதலியன நடைபெற்றன.

பின்பு சங்கக்காரியதரிசி Sri T. V. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. வந்தவர்களுக்கு தேனீர் விருந்தும் மாணவ, மாணவிகளுக்கு தின்பண்டமும் வழங்கப் பட்டன.

திருவாடானை போர்டு ஆண்பாடசாலை Ex-Assistant, Sri அச்சய நாயக்கர் அவர்களால் கொடுக்கப்பட்ட நன்கொடை ரூ. ஒன்றுக்கும் ஏழை மாணவனுக்கு புஸ்தகம், சிலேட்டு முதலியவை வாங்கி வழங்கப்பட்டன.

---

210015

## ஆண்டு விழா

நிகழும் 1946-ம் ஷூ அக்டோபர்-மீ 2-ம் உ திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் கார்மேல் வட வட்டகையைச் சேர்ந்த வழுதலங்குணம் பாடசாலையில் ஸ்ரீ M. D. கோதண்டராமன் B.A., L.T. சீனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர், Rev. பென்சில்வ், பிரஸிடென்ட் Rev. P. விசுவாசம் & Miss E. விண்டன் மேயர் என்னும் பெரியார்களின் தலைமையின்கீழ், அலங்கரிக்கப்பட்ட பந்தலடியில் வருஷாந்தர பெற்றோர் சங்கம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஸ்ரீ M. D. கோதண்டராமன் B.A., L.T. சீனியர் இன்ஸ்பெக்டர் அவர்கள் அக்ராசனம் வகித்தார். கடவுள் வணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. கடந்த 1946-ம் வருஷத்தில் நடந்த கூட்டங்களின் ரிப்போர்ட் வாசிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் சம்பாஷணை, பாட்டு, கும்மி, கோலாட்டம் இவைகளின் மூலமாய் வந்த பெரியார்களுக்கு சந்தோஷத்தை வாய்க்கச் செய்தனர். ஸ்ரீ M. D. கோதண்டராமன் B.A., L.T. இன்ஸ்பெக்டர் அவர்கள் பெண் கல்வியைப்பற்றி ஓர் இனிமையான சொற்பொழிவு செய்து, வந்த பெற்றோர்களின் உள்ளத்தை இன்புறச் செய்தார்.

---

## வீரபாண்டி சென்டர் ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டு விழா

18—1—47-ல் பெரியகுளம் தாலுகா வீரபாண்டி சென்டர் நாற்பத்தொன்றாம் ஆண்டு விழா ஷையூர் போர்டு பெண்பாடசாலையில் பெரியகுளம் ரேஞ்சு கல்வி அதிகாரி உயர் திரு. K. V. V. சுப்பிரமணிய அய்யர் B. Sc., L. T. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் ஷை ரேஞ்சு ஜூனியர் கல்வி அதிகாரி உயர்திரு G. கந்தசாமி, B. A., L. T. அவர்கள் ஆரம்பக் கல்வியும், ஆசிரியர்களின் கடமையும் என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினர். மேலும் சங்க சம்மந்தப்பட்ட பூதிப்புரம் போர்டு ஆண்பாடசாலை, வயல்பட்டி எயிடெட் பாடசாலை, காமயராஜபுரம் எயிடெட் பாடசாலை மாணவ, மாணவிகளால் கோலாட்டம், கும்மி, நடனம், சம்பாஷணைகள் நடத்தப்பட்டு, தேநீர் விருந்துடன் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிதே கலைந்தது.

சங்கக் காரியதரிசி, V. S. ராஜவேங்கடநாராயண சர்மா,
வீரபாண்டி.

---

## சங்கீதம்

[By B. Thomas Victor, Music Teacher.]

### காகமும் குடமும்

29 தீரசங்கராபரணம் — ஸ்ரிகமபதநிஸ்
ஆதிதாளம் — ஸ்நிதபமகரிஸ்

பா ஸா ஸா ஸ நி ஸ ரி ஸ நி பா ; | ரீ ரீ ரீ ரி க |
தாகத் தால்மிக வா . டி ன . | காகமொன்று |
க ம க ரி ஸா ; ||
பலஇடமும் . ||

ஸ ர் பா பா ப க ப த ப ம கா ; | ரீ ரீ ரீ ஸ ரி |
வேக மாய்ப் பறந்தே அலைய . | தண்ணீரில்லா |
க ம க ரி ஸா ; ||
தவித்ததுவே . ||

2. வீட்டருகில் வைத்திருந்த பாண்டம் ஒன்றை கண்டவுடன்
ஓட்டமாக ஓடி அது ஆவலுடன் நோக்கினது.
3. அப்பாண்டத்திலிருந்த சிறு தண்ணீர் அதற்கு எட்டவில்லை
இப்போது நான் என்செய்வேன் என்று திகைத்துநின்றதுவே.
4. நல்லயோசனை தோன்றியது என்று காகம் பறந்தோடி
பல கற்களைப் பொருக்கி பாண்டத்தினுள் போட்டிடவே.
5. தண்ணீர் மேலே பொங்கி எழ காகம் பருகி ஓடினது
மண்ணில் முயற்சியுள்ளவர்கள் வெற்றியடைவது நிச்சயமே.

Reg. No. M. 1534.

# பாலர்களுக்கேற்ற பாட்டு

D. சிவப்ரகாசம்

ஆரம்பபள்ளியில் கல்விகற்கும் சிறுவர்க்கு பாட்டு என்ருல் அதிகப் பிரியம் ஆதலினுல் அவர்களுக்கு பொருள்களைப்பற்றியும் மிருகங்கள், பட்சிகள், மரம் செடிகொடிகள் இவைகளைப் பற்றிக் கற்பிக்கும்போது அவைகளுக்கேற்ருற்போல் பாட்டுகள் தயாரித்து போதித்தால் அவர்கள் உற்சாகத்துடன் கற்றுக் கொள்வார்கள். இங்கே வீட்டு மிருகங்களின் (பசு-நாய்) பாட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## 1. பசுவும் கன்றும்

தோட்டத்திலே மேயுது வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி.
அம்மா வென்குது வெள்ளைப்பசு—உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி.
நாவால் நக்குது வெள்ளைப்பசு—பாலை
நன்ருய் குடிக்குது கன்றுக்குட்டி.
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு—மடி
முட்டிக்குடிக்குது கன்றுகுட்டி.

தமிழ்நாடு ஆவணக காப்பக
சென்னை 600 008

## 2. நாய்க்குட்டி.

என்னு டனே வசிக்கும் என் வீட்டு நாய்க்குட்டி.
மென்மை யான மேனியாம் மிகவும் நல்ல நாய்க்குட்டி.
வந்து வந்து என்னிடம் வாலை ஆட்டும் நாய்க்குட்டி.
பந்து ஒன்றை எறிந்தால் பாய்ந்து கவ்வும் நாய்க்குட்டி.
பின்னுல் ஓடி வந்திடும் பிரியமுள்ள நாய்க்குட்டி.
என்னைக் காணு விட்டாலோ எங்கும் தேடும் நாய்க்குட்டி.
கள்வர் கள்வரா மலே காவல் காக்கும் நாய்க்குட்டி.
கள்ளை உண்ட மனிதனைக் கடித்து ஓட்டும் நாய்க்குட்டி.
நல்லவர்கள் வந்திட் டால் நாவால் நக்கும் நாய்க்குட்டி.
பொல்லாதவர் வந்திட்டால் பொல்பொல் என்னும் நாய்க்குட்டி.

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 13—2—1947.